நாள்.23.01.2026
அசல் வழக்கு எண். 20/2021
வா. சா.2
பெயர். சுஜாதா
சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்
4, 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் கண்ட நல்லபெத்தான்குளம் கண்டிகை பேரிகுளம் பராமரிப்பு செய்யும் வேலை பொதுப்பணித்துறையை சார்ந்தது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களிலிருந்து எந்தெந்த குளத்திற்கு எந்தெந்த கால்வாயிலிருந்து தண்ணீர் வரும் என்பது தெரியாது என்றாலும், அதுப்பற்றி எனக்கு சாட்சியம் அளிக்க இயலாது என்றால் சரிதான்.

குளத்திற்கு எந்தெந்த கால்வாயிலிருந்து தண்ணீர் வரும் என வரைபடம் உண்டு என்றால் சரிதான். நான் அந்த வரைபடத்தை நீதிமன்றத்திற்கு கொண்டுவரவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள புலவரைபடங்களில் தான் அது துலங்கும். வேறு தனியாக வரைபடம் எதுவும் கிடையாது. நான் தாக்கல் செய்துள்ள எந்த ஆவணத்தில் மேற்படி விவரம் துலங்கும் என்றால் நான் தாக்கல் செய்த ஆவணத்தில் துலங்கவில்லை. குளத்திற்கு எந்த காலிலிருந்து தண்ணீர் வருகிறது என்பது பற்றி பொதுப்பணித்துறையில் தான் ஆவணங்கள் இருக்கும் என்றால் சரிதான். நான் சாட்சியம் அளிக்க வருவதற்கு முன்னால் நல்லபெத்தான்குளத்தை பார்வையிட்டேன் என்றால் சரிதான்.

நல்லபெத்தான் குளத்திற்கு வடக்கே தென்வடலாக ஒரு கால் வருகிறது என்றால் சரிதான். அந்த காலின் புல எண்.100 என்றால் சரிதான். தென்வடல் காலிலிருந்து நல்லபெத்தான் குளத்திற்கு தண்ணீர் வருகிறது என்றால் சரிதான். நல்லபெத்தான்குளத்திற்கு மேற்படி தென்வடல் காலிலிருந்து வரும் தண்ணீர் மடையில் சட்டர் இல்லாமல் உள்ளது என்றால் சரிதான். மேற்படி குளத்து மடையில் சட்டர் அமைப்பதற்காக நல்லபெத்தான்குளத்தை சார்ந்த விவசாயிகள் வருவாய்துறையிடம் பல ஆண்டுகளாக மனு கொடுத்து போராடிவருகிறார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நல்லபெத்தான்குளத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் ஹெக்டேர் 11.88.5 ஆகும். இந்த குளம் அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

நான் சாட்சியம் அளிப்பதற்கு முன்பு அந்த குளத்தின் அமைப்பு, மற்றும் அதற்கு தண்ணீர் வருகிற தென்வடல் காலை பார்வையிட்டேன் என்றால் சரிதான்.